# ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஶ்ரமம்

சாந்திமேடு, வீரபாண்டி பிரிவு, மேட்டுபாளயம் சாலை, கோயம்புத்தூர்

| | |
|---|---|
| **ஆசார்ய வ்ருக்ஷம்** | ***ஸம்புடம் 1 – சஞ்சிகை 12 சார்வரி ௵ மார்கழி ௴ (டிசம்பர்-ஜனவரி 2020)*** |



# “ஆண்டாள் சிறப்பு இணைப்பு”

| | | |
|---|---|---|
| **ஆசார்ய வ்ருக்ஷம்** |  | **மார்கழி மாதம்** |



## "ஆண்டாள் சிறப்பு இணைப்பு"

## பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | ஆண்டாள் படங்கள் | 1 |
| 2 | ஆண்டாளும் தேசிகனும் | 2 |
| 3 | ஆண்டாள் தனியங்கள் | 3 |
| 4 | திருப்பாவை ஒரு வேள்வி | 4 |
| 5 | கோதையின் மேகதூதம் | 7 |
| 6 | ஆண்டாளும் கிருஷ்ணனும் | 11 |
| 7 | ஆண்டாள் வைபவம் | 12 |
| 8 | பாடி கூடி சூடியச் சுடர்க்கொடி | 15 |
| 9 | ஆண்டாள் திருக்கல்யாணம் | 17 |
| 10 | ஆண்டாள் வரைபடம் | 19 |
| 11 | ஸ்ரீ வில்லிபுத்தூர் புகைபடங்கள் | 20 |
| 12 | ஆண்டாள் திருப்பாவை | 21 |
| 13 | ஆண்டாள் கவிதைகள் | 22 |
| 14 | ஆண்டாளும் ஆதிவராஹனும் | 24 |
| 15 | ஆண்டாளும் எதிராஜரும் | 28 |
| 16 | ஆண்டாள் அமுத மொழிகள் | 30 |
| 17 | ஆண்டாள் மங்களம் | 32 |

# OUR CONTRIBUTORS

# TO THIS SUPPLEMENT

| | | |
|---|---|---|
|  N.S.Ranganathachariar |  Mukkur Swamy |  S.Chitra |
|  Vijayaraghavan |  |  Veeraraghavan |
| | | |
|  Lakshmi Maniappan |  Hema raghavan |  RM Vipulaa |

# மார்கழி மாத ஸ்ரீ ஆண்டாள் சிறப்பு இணைப்பு




















வேயர் புகழ் வில்லிபுத்தூர் ஆடிப்பூரம்
மேன்மேலும் மிக விளங்க விட்டுசித்தன் *
தூய திருமகளாய் வந்து அரங்கனார்க்குத்
துழாய்மாலை முடிசூடிக் கொடுத்த மாதே *
நேயமுடன் திருப்பாவைப் பாட்டு ஆறைந்தும்
நீ உரைத்த தையொரு திங்கள் பாமாலை *
ஆய புகழ் நூறுடன் நாற்பத்துமூன்றும்
அன்புடனே அடியேனுக்கு அருள் செய் நீயே

# ஸ்ரீ ஆண்டாளின் தனியன்கள்

| Tamil | English Translation |
|---|---|
| நீளாதுங்க ஸ்தன கிரிதடீஸுப்தம்<br>உத்போத்ய க்ருஷ்ணம்<br>பாரார்த்யம் ஸ்வம் ச்ருதி சதசிரஸ்<br>ஸித்தம் அத்யா பயந்தீ<br>ஸ்வோச் சிஸ்டாயாம்<br>ஸ்ரஜிநிகளிதம்<br>யா பலாத்க்ருத்ய புங்க்தே<br>கோதா தஸ்யை நம இதமிதம்<br>பூய ஏவாஸ்து பூய : | To That Krishna who enjoys the bliss of sleep<br>On the lofty, hillocky breast of Nila,<br>Oh! Goda thou had offered floral garland<br>After adorning thy own tresses foremost;<br>Bound forcefully and enjoyed Him;<br>Had awakened the lion in Him;<br>Enticed and imparted to thy dependence;<br>The fact indicated in the vast Hymns of<br>Vedas and Upanishads;<br>Unto thee I offer my felicitation again and again. |
| அன்னவயல் புதுவை ஆண்டாள் அரங்கர்க்குப்<br>பன்னு திருப்பாவை பல்பதியம் – இன்னிசையால்<br>பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை<br>சூடிக் கொடுத்தாளைச் சொல்லு. | Andal of Puthur abound with swan in field<br>Had rendered many beautiful musical lyrics of Tiruppavai;<br>Had offered floral garland to Ranga,<br>Having worn foremost in her tresses;<br>Her you extol. |
| சூடிக்கொடுத்த சுடர்க் கொடியே தொல் பாவை<br>பாடி அருளவல்ல பல்வளையாய் - நாடி நீ<br>வேங்கடவர்க்கு என்னை விதி என்ற இம்மாற்றம்<br>நாம் கடவா வண்ணமே நல்கு. | Oh! Glittering creeping plant! Adorned many a bangle;<br>Thou had offered Him flower after adorning thyself;<br>Thou art capable of composing the ancient hymn and bless us;<br>Thou had prayed to achieve Vengada; favour us to serve Him;<br>Bless us, we may not transgress (His utterings). |
| கோதை பிறந்த ஊர்; கோவிந்தன் வாழுமூர்<br>சோதி மணிமாடம் தோன்றுமூர்; நீதியால்<br>நல்ல பத்தர் வாழுமூர் நான் மறைகள் ஓதுமூர்<br>வில்லிபுத்தூர் வேதக் கோனூர் | The town where Godai was born where Govindan lives,<br>Where gem bedecked palace appears<br>Where good devotees live adhered deep<br>To equitous life; chanted are the four vedas;<br>That town is Villiputhur Vedakkone's town. |

# மார்கழியே வருக !



## திருப்பாவை ஒரு வேள்வி

**(முக்கூர் லக்ஷ்மீ நரசிம்மாச்சாரியார்)**

பொறுமையே உருவானவர் பூமிப்பிராட்டி.

நாம் செய்யும் தவறுகளை பகவானிடத்திலே சொல்ல மாட்டாளாம்.

நாம் செய்யும் நல்ல காரியங்கள் அவை சிறியவையானால் கூட அதைப் பெரிசுபடுத்தி அவனிடத்திலே சொல்வாளாம். அவ்வளவு காருண்யம் நம்மிடத்திலே அவளுக்கு!

எம்பெருமான் பூமாதாவைப் பார்த்து, "இப்போது நீ போய் கீதையின் சாரத்தை எடுத்துச் சொல்லி, உலகத்தில் உள்வர்களைத் திருத்துவாயா?" என்று கேட்டார்.

"அதற்குத்தானே காத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன் சுவாமி!" என்றாளாம் பூமாதா.

முன்னதாக மஹாலக்ஷ்மி முடியாது என்று சொன்ன பொறுப்பை பூமாதா உடனே ஏற்றுக் கொண்டுவிட்டாள்.

அதற்கு சில காரணங்கள் உண்டு.

பகவான் மகாலக்ஷ்மியிடம் கேட்ட போது, தான் ராமாவதாத்திலும், கிருஷ்ணாவதாரத்திலும் பட்ட தொல்லைகளைக் காரணம் காட்டி பூமியில் அவதாரம் எடுக்கும் பொறுப்பை மறுத்துவிட்டாள்.

"நீங்கள் என்னைப் போகச் சொல்வீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்" என்று முந்தானையிலே போட்ட முடிச்சோடு சொல்கிறாளாம். எப்போது போட்ட முடிச்சு அது?

வராஹ அவதாரத்திலே, வராஹத்தின் மூக்கில் மேலே உட்கார்ந்திருந்த போது அவன்(பகவான்) சொன்ன மூன்று கட்டளைகளுக்காகப் போட்ட மூன்று முடிச்சுகள்.

- அவன் திருவடியிலே மலரிட்டு அர்ச்சனை செய்யவேண்டும்.
- அவன் திருநாமத்தை உரக்கச் சொல்ல வேண்டும்.
- அவன் திருவடியிலே ஆத்ம சமர்ப்பணம் பண்ண வேண்டும் என்ற மூன்று கட்டளைகளுக்காகப் போட்ட மூன்று முடிச்சுக்கள்.

இப்போதே நீங்கள் போகச் சொன்னாலும் சித்தமாயிருக்கிறேன் என்றாள் பூமாதேவி.

"எங்கே போவாய்? யாரிடம் பிறப்பாய்?" என்றார் பகவான்..

"உங்களுடைய அனுக்கிரஹம் உதவும்" என்று புறப்பட்டுவிட்டாள் தேவி.

விஷ்ணு சித்தரின் மகளாய் வந்து அவதரித்தாள். நம் திராவிட தேசத்துக்கே அந்த அவதாரம் பெருமை சேர்த்தது.

கல்பத்தின் ஆதியிலே கேட்ட வராஹ மூர்த்தியினுடைய வாக்கைத் தானே எடுத்துக் காட்ட வேண்டும் என்பதற்காக துளவி வனத்திலே அவதரித்தாள் பூதேவி. பிறக்கும் போதே மேன்மையுடைவளாய், சுவாசனையுடன் ஆர்பவித்தாள்.

**இருமாலை கட்டினாள்.**
**ஒரு மாலை பாமாலை,**
**ஒரு மாலை பூமாலை.**

ஒன்றைப் பாடிச் சமர்ப்பித்தாள். மற்றதைச் சூடிச் சமர்ப்பித்தாள். சூடிக் கொடுத்த நாச்சியார் என்று பெயர் பெற்றாள்.

திருப்பாவை முப்பது பாசுரங்கள் பாடினாள் ஆண்டாள்.

- **அவற்றில் முதல் பத்து "அவன் திருநாமத்தைச் சொல்லு என்று உணர்த்துகின்றன".**
- **இரண்டாவது பத்து, "உயர்ந்ததான அவன் திருவடியை அர்ச்சனை பண்ணிப் பாரு " என்று சொல்கின்றன.**
- **மூன்றாம் பத்து "சரணாகதி" என்ற உயர்ந்த தத்துவத்தை காட்டிக் கொடுக்கின்றன.**

ஆக வராஹ மூர்த்தியினிடத்திலே அன்று கேட்ட மூன்று விஷயங்களை முப்பது பாசுரங்களைய்ப் பாடி ஆண்டாள் அவதாரத்திலே எடுத்துக் காட்டினாள்.

திருப்பாவை என்பது ஒரு நூல் மட்டுமல்ல. அது ஒரு யக்ஞம். ஆண்டாள் பண்ணிய வேள்வி அது.

வராஹ மூர்த்தியினிடத்திலே பெற்ற உபதேசத்தைக் கொண்டு தனுர் (மார்கழி) மாசத்திலே ஒரு வேள்வி வளர்க்கிறாள்.

வேள்வி-யக்ஞம் செய்வதற்கு கபாலம் என்றொரு பாத்திரசாதனம் உண்டு. அதிலே புரோடாசத்தை வைத்து நெய்யைத் தடவி சமர்ப்பிப்பார்கள்.

ஆண்டாள் பண்ணிய திருப்பாவையின் மூன்று பத்தும் மூன்று கபால சாதனங்கள் என்றே சொல்லலாம். ஆசார்ய அனுக்கிரஹம் என்கிற நெய்யினால் தடவி அதைச் சமர்ப்பிக்கிறாள். யக்ஞம் பண்ணும்போது ஒவ்வொரு கபாலத்தைச் சமர்ப்பிக்கும் போதும் திரிவிக்கிரமாவதாரனான எம்பெருமானை ஸ்தோத்திரம் பண்ணிச் சமர்ப்பிப்பது மரபு.

திருப்பாவையின் மூன்று பத்தும் மூன்று கபாலங்கள் என்றேன் இல்லையா? ஒவ்வொரு கபாலத்தின் தொடக்கத்திலும் திரிவிக்கிரமனை துதிக்கிறார் ஆண்டாள் என்பதைக் கவனிக்க வேண்டும்.

- **"ஓங்கி உலகளந்த உத்தமன்" என்று முதல் பத்திலே திரிவிக்கிரமனை நினைக்கிறாள்.**
- **"அம்பர மூடறுத்து ஓங்கி உலகளந்த.." என்று அடுத்த பதினொன்று முதல் இருபது வரையிலான பாசுரத்துக்குள்ளே இரண்டாவது முறையாக திரிவிக்கரமாவதாரத்தைப் பாடுகிறாள்.**
- **"அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி" என்று மறுபடியும். இருபத்தொன்று முதல் முப்பது வரையிலான பாசுரங்களுக்குள்ளே மறுபடியும் திரிவிக்கிரமன் திருவடிகளைப் போற்றுகிறாள்.**

ஆகையினாலே, திருப்பாவை ஒரு வேள்வி போன்றது ஆண்டாள் நமக்கு கீதையின் வழியைக் காட்டி, "நாமம் ஆயிரம் ஏத்த நின்ற நாராயணா!" என்று ஆச்ரயித்து, அவனையே திருக்கல்யாணமும் செய்துக் கொண்டாள்.

ஆண்டாள் அழைத்தாள் என்று வந்து குதித்த பெருமான், ஸ்ரீவில்லிப்புத்தூரிலே மடிந்த திருவடியோடு காட்சி தருகிறான்.

பெரியாழ்வாரோ, கன்னிகாதானம் செய்து கொடுத்துவிட்டு அழுகிறார்! "ஒரு பெண்ணைப் பெற்றேன். அவளைச் செங்கண்மால் கொண்டு போனான்.. நான் என்ன செய்வேன்.." என்று அவருக்கு வேதனை.

ஆனால் ஆண்டாள் சேர வேண்டிய இடத்தில் சேர்ந்தாள். அப்படிச் சேர்ந்ததில் நமக்கெல்லாம் ஒரு வழிகாட்டல் இருக்கிறது.

**வராஹ மூர்த்தி சொன்னதை அனுசரித்து அவள் அவனை அடைந்தது போல நாமும் அவனை அடையலாம்.**

**அவன் நமக்குப் பதி.. நாம் அவனுக்கு பத்னி எனற பாவத்துடன் உத்தமமான சரணாகதி மார்க்கத்தைக் கடைப்பிடித்தோமானால் நாமும் அவனை அடையலாம்.!**

ஸ்ரீ :

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரம்ஹணே நம :
ஸ்ரீமதே ராமானுஜாய நம : | ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம :

---

அல்லிநாள் தாமரை மேல் ஆரணங்கினின் துணைவி *
மல்லி நாடாண்ட மடமயில் - மெல்லியலாள் *
ஆயர்குல வேந்தன் ஆகத்தாள் * தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு

நாச்சியார் திருமொழி தனியன் - திருகண்ணமங்கையாண்டான்

ஆர்த்ராபராதிநி ஜநேப்யபிரக்ஷணார்த்தம் | ரங்கேச்வரஸ்ய ரமயா விநிவேத்யமாநே ||
பார்ச்வே பரத்ரபவதீ யதிதத்ர நாஸீத் |ப்ராயேண தேவி வதநம் பரிவர்த்திடம் ஸ்யாத் ||

ஸ்ரீ கோதாஸ்துதி - ஸ்லோகம் 24 - ஸ்ரீ ஸ்வாமி தேசிகன்

===============================================================================

# கோதையின் மேகதூதம்

நாச்சியார் திருமொழி என்பது முதலாயிரத்தில் மூன்றாவதும், ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த இரு ப்ரபந்தங்களில் இரண்டாவதும் ஆகும்.

திருமொழி என்பது - இன்னார் இயற்றியது, இன்ன பலனைத் தருவது என்றவற்றை வெளியிடும் பாசுரத்தோடு சேர்ந்து, பாசுரங்கள் பத்துக்குக் குறைவில்லாத பாகமாகும். திருப்பாவையில் பத்துப் பாசுரங்கள் தோறும் இத்தகைய பிரிவில்லாமல் “முப்பதும் தப்பாமே” என்றபடி ஒன்றாக அமைந்திருப்பதால், அது திருமொழி என வழங்கப்படவில்லை.

மேலும் பெரியாழ்வார் திருமொழி, பெரிய திருமொழி போன்ற பல திருமொழிகளிருப்பதால், அவைகளினின்றும் வேறுபாடு தோற்றவும், பாடவல்ல நாச்சியாரான ஸ்ரீ ஆண்டாள் திருவாக்கினின்று இவை வெளிவந்தபடியாலும், இஃது “நாச்சியார் திருமொழி” என வழங்கப்படுகிறது. திருப்பாவை எனப்படும் ப்ரபந்தங்கள் பலவில்லை ஆகையாலே, அங்கே நாச்சியார் எனப்படும் சொல் சேர்க்கப்படவில்லை.

தவிரவும், திவ்யப்ரபந்தங்களுக்குப் பெரும்பாலும் ஸ்ரீமந் நாதமுனிகள் காலத்தில் ஏற்பட்ட திருநாமங்களே வழங்கப்பெறுகின்றன என்றும், ப்ரபந்தம் அருளினவர் வைத்த பெயர் இவை இருக்கமாட்டா என்றும் ஆராய்ச்சியாளரகள் கூறுவதையும் சில இடங்களில் கொள்ளவேண்டும்.

இதன்படி, இந்த நாச்சியார் திருமொழியில், ஸ்ரீ ஆண்டாள் ஹேமந்த, சிசிர ருதுக்களில் முன்பு நோன்பு நோற்று, வஸந்த ருதுவில் எம்பெருமானைத் தன்னிடத்தில் வரவேண்டிக் குயிலை ஏவி, க்ரீஷ்ம ருதுவின் இடைக்காலத்திற்கு முன்னமே கனவில் கண்ணபிரானுக்கு மனைவியாகி, பிறகு அவன் வாயமுதம்முண்டு அனுபவிக்கக் காதல் கொண்டு அவன் சேர்க்கையை நினைத்துப் பேசி நின்றாள்.

இவ்வாறு இருக்கையில், மாரிக்காலமும் உடனே வந்தபடியால், வானத்தில் மேகங்கள் எங்கும் நிறைந்தேறி நின்றதைக் கண்ட ஸ்ரீ ஆண்டாள், திருவேங்கடத்து எம்பெருமானே மேகங்களாக எழுந்தருளியிருப்பானென நினைத்தாள். ஒருவேளை அவன் வராமலிருந்தால், தன்னை நலியும் அந்த மேகங்களையே தூதாக அனுப்பி அவனைத் தன்னிடத்தில் வருவிக்கலாமோ எனவும் எண்ணினாள். அதன் மேல் பிறந்த பாசுரங்களே,

தற்பொழுது நாம் அனுபவிக்க இருக்கும் “மேகத்தை தூது விடுத்த கோதை” என்னும் இந்த கட்டுரையாம். இதன் படிக்கு,

1. விண்ணீலமேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்...... (1)” என்னும் முதல் பாசுரத்தில், அகாயத்தில் நீலநிற விதானம் விரித்தால் போல விளங்கும் மேகங்களே, தெளிந்த நீரருவி கொட்டும் திருவேங்கடமலைத் திருமால் உங்களுடன் வந்தானோ? பிரிவுத்துயரால் வருந்தி அழுகிற தன்னுடைய பெண்மையின் உயர்வை அழிக்கின்|ற இச்செயல் அப்பெருமானுக்குப் பெருமை தரக்கூடிய ஒன்றா என்கிறாள்.

   இவள் முலைக்குவட்டில் கண்ணீர் சொரிவது, திருவேங்கடத்தில் தெண்ணீர் பாய்வது போலாயிற்று. ஆனால் அது குளிரருவியாயிருக்கும். இது வெந்நீர் வார்ப்பது போலிருந்ததாம். அதனால் மிகவும் சோர்ந்தாள்.

   திருவேங்கடமலையில் தண்ணீர் பாய்வது பெருமையாம். “கலிக்ஷோபோந்மீலத்... நிர்ச்சர கணா:” என்னும் தயாசதக ஸ்லோகப்படிக்கு எல்லாம் தயாப்ரவாகமாம். அத்தெண்ணீர் போல, தானும் அவனுடன் கலந்து, கண்ணீரின்றிக் குளிர்ந்து தெளிந்த ஆனந்தக்கண்ணீர் சொரிந்தாலன்றோ தமக்குப் பெருமை என்கிறாள் இப்பாசுரத்தில்..

2. பிறகு, திருவேங்கடவன் வரவில்லையென்று தெளிந்து, அவன் எதாவது சொல்லியாவது அனுப்பியிருப்பானோ என்று நினைத்து, உயர்ந்த முத்துக்களையும், பொன்னையும் சொரிகின்ற மேகங்களே, நீலநிறமுடைய திருவேங்கடவன் என்னும் மேன்மையன், தனக்கு ஏதாவது செய்தி விடுத்திருக்கிறானா என்றும், விரகதாபமான தீ அவளுள் புகுந்து விட்டபடியால், இரவு நடுயாமத்தில் வீசும் தென்றல் காற்றின் கொடுமைக்கு இலக்காகி விட்டதாகவும், அதனால் நலிந்து தான் இங்கு இருப்பேனா என்றும், இரண்டாவது பாசுரமான “மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள் .... (2)” என்பதில் மேகங்களைப் பார்த்து கேட்கிறாள் ஸ்ரீ ஆண்டாள்.

3. இச்சமயத்தில் மேகங்கள் மெல்ல முழங்கவே, அவைகள் தயை புரிந்து தனக்கு ஹிதோபதேசம் செய்வதாக நினைத்தாள். எனவே, மூன்றாம் பாசுரமான “ஒளிவண்ணம் வளை சிந்தை உறக்கத்தோடிவையெல்லாம் ..... (3)” என்றவிடத்தில், தனக்கு அருள் புரியும் முகில்களைப் பார்த்து, அவ்வெம்பெருமான் தன்னை உபேக்ஷித்ததினால் உண்டான தீனதசை காரணமாக தன் ஒளி, நிறம், வளைகள், த்யான சக்தி, நித்திரை, இவை போன்றவைகள் யாவும் தன்னுடைய பெருமையெல்லாம் அழியும்படி தள்ளிவிட்டுப் போய்விட்டதால் கஷ்டம். இப்படியான பிறகு, குளிர்ந்த நீரருவிகளையுடைய திருமலையில் எழுந்தருளியுள்ள கோவிந்தனான கண்ணனின் திருக்கல்யாணகுணங்களை, இசையுடன் கீர்த்தனம் செய்து கொண்டு, அதுவே தாரகமாகத் தனது ப்ராணனை பாதுகாத்துப் பிழைத்திருக்க முடியுமா என்கிறாள் ஸ்ரீ ஆண்டாள்.

4. தென்றல் பட்டு, வடதிசையை நோக்கிச் செல்லும் மேகங்களைப் பார்த்து, திருவேங்கடமுடையான் வார்த்தையைக் கொண்டு வந்த மேகங்களோ என்று தான் நினைத்ததாகவும், அது இல்லாது போனதால் தனது வார்த்தையையாவது ஆங்கவனுக்குக் கூறுவீர்களோ என்னும் பொருள்படும்படி, “மின்னாகத்தெழுகின்ற மேகங்காள் ... (4)” என்கின்ற இந்த பாசுரத்தில் மின்னல் பொருந்திய ஆகாயத்தில் ஏறுகின்ற மேகங்களைப் பார்த்து, திருவேங்கடத்திலிருக்கும் தன்னுடைய உடலான பெரியபிராட்டி நித்யவாசம் செய்யும், எல்லாக்குணங்களும் பெற்ற திருமார்பையுடைய ஸ்ரீநிவாஸனுக்கு, அவனை விரும்பி, உடம்போடு மார்பு தழுவுவதற்கு ப்ரதி தினமும் தான் ஆசைப்பட்டிருப்பதை சொல்லுங்கோள் என்கிறாள் ஸ்ரீ கோதைப் பிராட்டி.

5. முதலில் போய்ப் பேசத் தொடங்கும் போதே, “நாள்தோறும் பொன்னாகம் புல்கும்படி வந்திருக்க வேண்டுகிறாள்” என்று சொல்லக்கூடுமோ என்று, அதனையும் ஒரு வகையில் கவனித்துச் சொல்லலாமென்று, “வான்கொண்டு கிளர்ந்தெழுந்த மாமுகில்காள் .... (5)” என்னும் பாசுரத்தில், திருவேங்கடமலையில் தேன் நிறைந்த புஷ்பங்கள் உதிர்ந்து விழும்படி, ஒன்றாகக்கூடி மிகவாகப்பெய்கின்றவர்களாய் நடுவானத்தைப் பற்றிக் கிளம்பி மேற்சென்ற மேகங்களே, மாம்ஸப் பிடிப்பினால் உறுதியான சரீரத்தையுடைய ஹிரண்யாஸூரனை, கூர்மையான நகங்களாலே பிளந்த பரமன், தன் கையில் இராதபடிச் செய்த தன்னுடைய கைவளைகளை அவன் கொடுக்கும் நிலைமையிலிருந்தால், தன்னுடைய அவல நிலையை அவ்வெம்பெருமானிடம் எடுத்துக் கூறுங்கள் என்கிறாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி.

6. பொன்னாகம் புல்குதல் இல்லையென்றதால், இஷ்டப்ராப்தியில்லையே என்றது சொல்லியாயிற்று. மேலே அநிஷ்டங்கள் இருக்கின்றனவே என்று சொல்ல இயன்று, சரிவளைகள் போனதைப் பணித்தாள். அணிகள் அகன்றது கிடக்கட்டும், அவஸ்தைப் படுவது எப்போது ஒழியும் என்கிற கருத்தோடு, “சலங்கொண்டு கிளர்ந்தெழுந்த தண்முகில்காள் .... (6)”, இந்த பாசுரத்தை அருளிச்செய்கிறாள் ஸ்ரீ கோதா நாச்சியார். இதன் படி, ஆழியுட்புக்கு ஜலம் முகந்து கொண்டு, வெளிக்கிளம்பி வானம் சென்ற மேகங்களைப் பார்த்து, மஹாபலியை முழு உலகுடன் தன் வசமாக்கிக்கொண்ட பிரான் எழுந்தருளியுள்ள திருமலையின் மீதேறிப் பரந்து மழைபொழிபவர்களே, உலங்கு என்னும் ஜாதி வகையைச் சேர்ந்த கொசுக்கள் புகுந்துண்ட விளாம்பழம் போல், உள்பாகம் க்ஷீணிக்கும்படி என்னுள் புகுந்து தன் நன்மைகளை அழித்த நாராயணனுக்கு தனது மனத்துயரம் மூலமான வியதியைச் சொல்லுங்கோள் என்கிறாள் பாடவல்ல நாச்சியார்.

7. “ஏதி ஜீவந்தமாநந்தோ நரம் வர்ஷஸ்தாதபி” என்றபடி, உயிரிருந்தால் வருஷம் நூறான பிறகாவது, ஆனந்தமென்பது வந்தே தீரும் என்று நம்பி நடலை நோயைப் பொறுப்பொம் என்றால் முடியவில்லை. உயிர் நின்றால் தானே எப்போதாவது கோரினதைக் காண்பது. நாள்தோறும் புல்கினால்தான் ஆவி தங்குமோ என்று எண்ணவேண்டாம். ஒருநாளாவது தன்னுடைய கோருதலை நிறைவேற்றினாலும் போதும் என்று, “சங்கமாகடல் கடைந்தான் தண்முகில்காள் ... (7)” என்னும் இப்பாசுரத்தில், குளிர்ந்த மேகங்களைப் பார்த்து, பெரிய பாற்கடலைக் கடைந்தவனும், செந்தாமரைக் கண்ணனும், வியாமோஹமுள்ளவனுமான, திருமலையில் எழுந்தருளியிருக்கக்கூடிய விஷ்ணுவினிடத்தில், அவனுடைய செவ்விய திருவடிகளில் விழுந்திருப்பவளான தன்னிடம் வந்து, அரைத்துப் பூசின குங்குமப்பூவின் ரஸமெல்லாம் அவிந்து போகும்படி ஒருநாள் தங்கினால் கூட தனது ப்ராணன் அழியாமல் இருக்கும் என்றவாறு சொல்லுங்கள் என்கிறாள் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார்.

8. இப்படி ஒருநாள்கூட வரக்கூடாதபடி இருந்தாலும், அவர் ஒரு வார்த்தையாவது சொல்லி அனுப்பக் க்ருபை கூர்ந்தால் நலமாகயிருக்காதா என்கிறாள், “கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள் ... (8)” என்னும் இப்பாசுரத்தில். இதன்படி, திருமலையில் மழைக்காலத்தில் மேற்கிளம்பும் கரிய மேகங்களைப் பார்த்து, அடியார்களுக்காகப் போர் செய்து வெற்றி பெறும் பகவானின் திருநாமங்களை தாம் பலபடியாகச் சொல்லி, மழைக்காலத்தில் பழுத்து விழும் எருக்கஞ்செடியின் இலைபோலத் தளர்ந்து விழுவதாகவும், அப்படிப்பட்ட தனக்கு நெடுங்காலத்திலே என்றைக்காவது தமது வார்த்தையையாவது சொல்லியனுப்பி அருளமாட்டரா என்கிறாள் ஸ்ரீ ஆண்டாள்.

9. “வாசகம் தந்தருளாரோ” என்றபோது அவன் முன்சொன்ன வார்த்தை நினைவுற, அவன் பொய் சொல்லுகின்றானென்று அறிந்த பிறகு, அவன் வாசகத்தை எதற்கு நம்பவேண்டும். நம்ப முடியாதே. வாசகம் தராவிடில், துஷ்யந்தன் சகுந்தலையை முதலில் மறந்தாற்போலே மறந்துவிடானென்று, இவன் விஷயத்தில் சொல்லலுமாகாது என்று நினைத்து “மதயானை போலெழுந்த மாமுகில்காள் .....(9)” என்கிற பாசுரத்தில், திருவேங்கடமலையை இருப்பிடமாகப் பெற்று வாழ்கின்ற மதம்பிடித்த யானைகளைப் போல் கொடுமுடிக்குச் செல்லும் மேகங்களைப் பார்த்து, ஆதிசேஷனைப் படுக்கையாக உடையவனின் பேச்சானது என்ன இப்படியகின்றதே? எக்காலத்திலும் ரக்ஷகனாயிருக்குமவன், தன் போன்றவர்களை நினைகாமலேயிருந்து, ஒப்பற்ற கொடிபோன்ற பெண்ணை வதைத்தான் எனப்படும் சொல்லை இப்பூமியிலுள்ளவர் நம்பமாட்டர்களே. எனவே இத்தகைய அபகீர்த்தி அவனுக்கு வராதபடி பார்த்துக்கொள்ளட்டும் என்கிறாள் ஸ்ரீ கோதா நாச்சியார்.

10. இறுதியாக, “நாகத்தினணையானை நன்னுதலாள் ..... (10)” என்னும் பாசுரத்தில், பக்தியில் தவறாத, புதுவைக்கோன் பெரியாழ்வாரின் மகளான, அழகிய முகமுடைய ஆண்டாளாகிய தாம், ஆதிசேஷனின் ஒரம்சத்தைப் படுக்கையாக உடைய பிரானாகிய திருவேங்கடவனை அடைய ஆசைப்பட்டு, மேகங்களை தூது அனுப்புவதாய் விஜ்ஞாபனமான இப்பாசுரங்களை மனத்தில் கொண்டு ஓதுபவர் திருமாலுக்கும், பாகவதர்களுக்கும் அடிமை செய்பவராவர் என்றருளி, இந்த தசகத்தைத் தலைக் கட்டுகிறார் ஸ்ரீ ஆண்டாள்.

ஸ்ரீ ஆண்டாள் திருவடிகளே சரணம்
ஆழ்வார், எம்பெருமானார், சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

அடியேன்
நாவல்பாக்கம் ரங்கநாததாத தாஸன், மயிலாப்பூர், சென்னை

***   ***   ***





# ஆண்டாளும் கிருஷ்ணனும்



Art by Lakshmi Maniappan Bangalore

ஸ்ரீஹரி:

# ஸ்ரீ ஆண்டாள் (வைபவம்) வரலாறு

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்தில், பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் வடபெருங்கோயிலுடையானுக்கு மாலைகள் சமர்ப்பிக்க, நந்தவனம் அமைத்துத் தொண்டு செய்து வந்தவர், பட்டர்பிரான். பரமனுக்குப் பல்லாண்டு பாடிய பெரியாழ்வார்!

குழந்தைப்பேறு இல்லாத அவருக்கு, இராமாயண ஜனகருக்கு ஏர்முனை நாயகியாகச் சீதை கிடைத்தது போல, திருத்துழாய்ச் செடியின் அடியில் கிடைத்தாள், ஒரு பெண் குழந்தை. திருவாடிப்பூரம் ஆண்டாளின் திரு அவதார நாள். கோதை என்று பெயரிட்டுச் சீருடனும் சிறப்புடனும் வளர்த்து வந்தார், பெரியாழ்வார்.

சிறுவயது முதலே குழந்தை பக்திச்சூழலில், அரங்கனின், கண்ணனின், திருமாலின் நினைவாகவே இருந்தது. பருவம் வந்த அளவில், **'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்'** என்று கூறி, அரங்கனையே மணப்பது என்று முடிவு செய்தாள், கோதை.

வடபெருங்கோயிலுடையானுக்கென்று (கோவில் இறைவனுக்கு), பயபக்தியுடன் தந்தை கட்டி வைத்திருந்த அழகான மாலை ஒன்றை அவர் இல்லாதபோது, தான் அணிந்து, 'அழகே வடிவான இறைவனுக்குத் தான் ஏற்ற துணைவிதானா?' என்று அழகு பார்த்தாள், கோதை. **'காறை பூணும் கண்ணாடி காணும்' (பெரியாழ்வார் திருமொழி 3–7–8).** தந்தை கண்டுவிட்டார்; துணுக்குற்றார்; மகளைக் கடிந்தார். அன்று முழுவதும் உண்ணாது உறங்காது, 'பழி நேர்ந்ததே' என்று வருந்தினார்.

அவரது கனவில் வடபெருங்கோயிலுடை இறைவன் தோன்றி, 'ஏன் மாலை சூட்ட வரவில்லை?' என்று கேட்டார். நடந்ததை ஆழ்வார் கூற, **'கோதையின் மாலை இன்றித் தம் தோள்கள் வாட்டமுற்றிருப்பதாக'க்** கூறி, அதனைக் கொண்டுவர ஆணையிட்டார்.

கோதை சூட்டி மகிழ்ந்ததைக் கோபாலன் ஏற்று மகிழ்ந்தார். **'சூடிக்கொடுத்த நாச்சியார்'** என்று பெயர் பெற்றார், கோதை. உலக வழக்கப்படி மணம் செய்து கொள்ள மறுத்த பெண்ணை எண்ணி வருந்தினார், ஆழ்வார்.

பாகவத காலத்தில் விரதம் இருந்து, ஆயர்பெண்கள் கண்ணனை அடைந்ததை எண்ணியும், தமிழர் மரபுப்படி பாவை நோன்பு, தைந்நீராடல் என்பதைக் கருத்தில் கொண்டும் திருப்பாவைப் பாடல்களாலேயே பாவை நோன்பு நோற்றார். நாச்சியார் மொழிப் பாடல்களால் இறைவனுக்குப் பட்சிகளைத் தூதுவிடுத்தார்.

சூடிக்கொடுத்த நாச்சியார் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்று இன்று வழங்கப்பெறும் அழகிய நூல்களைப் பாடிய **'பாடிக் கொடுத்த நாச்சியாராகவும்'** ஆனார்.

காலம் கனிந்தது. கனவில் சோழ–பாண்டிய மன்னர்களுக்கும், பெரியாழ்வாருக்கும் கோதையை மணப்பெண்ணாக எல்லா அலங்காரங்களுடனும் திருவரங்கப் பெருநகருக்கு அழைத்துவர ஆணையிட்டான், அரங்கன்.

ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து மூடுபல்லக்கில் அரசகுமாரி போல அழைத்துச் செல்லப்பட்டாள், கோதை.

அரங்கன் திருமுன்பு, பல்லக்கினின்றும் இறங்கி, பட்டாடையை உதறி உடுத்து, புதுமணப்பெண் போல அரங்கனை நோக்கி நடந்தாள், கோதை.

'என்ரங்கத்தின்னமுதர், குழலழகர், வாயழகர், கண்ணழகர்' என்று காலமெல்லாம் தான் காதலித்த அரங்கனைக் கண்டு, அவன் உறங்கும் நாகணையை மிதித்து ஏறி, அவன் திருவடிகளில் கலந்து விட்டாள், அன்னை! இதுதான் வைதிகமான (பழமையான) ஆண்டாள் திருக்கல்யாணம். 'ஜனக ராஜனைப் போல் நீரும் நமக்கு மாமனாராகி விட்டீர்' என்று அசரீரி (உருவமற்ற ஒலி) எழுந்தது.

**''ஒருமகள் தன்னையுடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன். செங்கண்மால்தான் கொண்டு போனான்'' (பெரியாழ்வார் திருமொழி 3-8-4)** என்று தலைமகனுடன் சென்ற தலைமகளைப் பற்றிய பெரியாழ்வார் பாசுரம் நினைக்கத்தக்கது.

இதுதான் ஆண்டாளின் திருக்கல்யாணம். ஆன்மாவான உயிர், இறைவன் திருவடிகளில் இணைவதைக் குறிப்பதுதான் இது. வைணவத்தில், ஆண்டாள், திருப்பாணாழ்வார் இருவர்க்கு மட்டுமே இப்பேறு வாய்த்தது.

பெரியாழ்வார், மற்றும் ஸ்ரீ வில்லிபுத்தூர்ப் பெருமக்கள் வேண்ட, **'வாரணம் ஆயிரம்'** என்ற அன்னையின் கனவுத் திருமணத்தை நனவாக்கி, முறைப்படி திருமணம் புரிந்து கொண்டான் அரங்கன் என்பது வழிவழியான கதை. இன்றும் ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆண்டாள் நாச்சியாருடன் ரங்கமன்னார் எழுந்தருளிப் பக்தர்களைக் காத்தருள்கிறான்.

**சூடிக்கொடுத்த நாச்சியார்–ரங்கமன்னார் திருவடி மலர்களே நமக்குத் தஞ்சம்.**

## பாடி கூடி சூடியச் சுடர்க்கொடி



ஶ்ரியப்பதியான பெருமாளின் பல்வேறு அவதாரங்களில், வராஹ அவதாரம் மிகவும் ஸ்ரேஷ்டமானது. பராசரபட்டர், தனது "கைஸிக மஹாத்மியத்"திலும், ஸ்ரீ வேதாந்த தேசிகர், அவரது "ரஹஸ்ய சிகாமணி" என்னும் க்ரந்தத்திலும், கேழலாகத் தோன்றிய மஹாவிஷ்ணுவைத் துதித்துள்ளனர்.

நம்மாழ்வார், திருவிருத்தத்தில், "ஞானப்பிரானையல்லால் இல்லைநான் கண்ட நல்லதுவே" என்றும், திருவாய்மொழியில் "கோலவராஹமொன்றை நிலங் கோட்டிடை கொண் வெந்தாய், நீலக்கடல் கடைந்தாய் உன்னைப்பெற்றினைப் போக்குவனோ" என மங்களாஸாஸனம் அருளியுள்ளார்.

ஹிரண்யாக்ஷன் எனும் அரக்கன், பூதேவியை பாதாள லோகத்தில் மறைத்தபோது, ஸ்ரீமந்நாராயணன், வராஹ ரூபம் தரித்து, பிராட்டியை வெளிக்கொணர்ந்தார்.

नश्टाम्च धरणीम् पूर्वम्    अविन्दन् च गुहागताम्    गोविन्द इति तेनाहम्

வராஹர், பூமிப்பிராட்டியை ரக்ஷணம் செய்தபடியால், அவருக்கு "கோவிந்தா" எனும் திருநாமம் வழங்கப்படுகின்றது.

லோகமாதாவான பூமிதேவி, தன்னை உத்தரணம் செய்த பெருமாளை நோக்கி, "பாதாளத்தில் அழுந்திக்கிடந்த என்னைக் கரை ஏற்றியது போல், நம் குழந்தைகளையும் ஸம்ஸார ஸாகரத்திலிருந்து மீட்க வேண்டாமா? அவர்கள் எளிமையாகச் செய்யக்கூடிய லகூ உபாயத்தை அருளும்படிக் கோரினாள். "அஹம் ஸிஷ்யா ச தாஸீ ச பக்தா ச த்வயி மாதவ! மத்க்ருதே ஸர்வபூதானாம் லகு உபாயம்

வத ப்ரபோ!"    அதற்கு பெருமாள், " நாம ஸங்கீர்த்தனம், அர்ச்சனம் மற்றும் சரணாகதி" என்று மூன்று வழிகளை உபதேசித்தார்.

அதனைக் கேட்ட பூமிப்பிராட்டி, தானே பூமியில் அவதரித்து, தனது அனுஷ்டானம் மற்றும் க்ரந்தத்தாலும், மக்களனைவருக்கும் புருஷகாரத்திற்கான மார்க்கத்தைக் காட்டப்போவதகாக விஞ்ஞாபனம் செய்தாள். பெருமாளின் அனுக்ரஹத்தின் பேரில், ஸ்ரீவில்லிப்புத்தூரில் அவதரித்தாள்.

**कल्पादौ हरिणा स्वयं जनहितं दृष्ट्वैव सर्वात्मनां,**

**प्रोक्तं स्वस्य च कीर्तनं प्रपदनं स्वस्मै प्रसूनार्पणम्।**

**सर्वेषां प्रकटं विधातुमनिशं श्रीधन्विनव्ये पुरे,**

**जातां वैदिकविष्णुचित्ततनयां गोदामुदारां स्तुमः ॥३॥**

அனந்தாழ்வான், "கோதா சதுஸ்லோகி" யில் தெளிவாக இயம்பியுள்ளார்..

உந்தன் தாய் துளசி தேவி, தந்தை விஷ்ணு சித்தர், சகோதரர் ஸ்ரீமத் ராமானுஜர் மற்றும் கணவர் ரங்கநாதப் பெருமாள், உங்கள் படைப்புகளே மகன்கள், நீங்கள் பாலாக அமிர்தத்தை குடித்து வளர்ந்தீர்கள், ஓ கோதா தேவியே, உங்களை எப்படி எளிதாக பெற முடியும்!"

கோதை மற்றும் நாச்சியார் என்றும் அழைக்கப்படும் ஸ்ரீ ஆண்டாள், பன்னிரண்டு அழ்வார்களில் ஒருவர். ஆண்டாள், திருப்பாவை மற்றும் நச்சியார் திருமொழி ஆகிய இரண்டு படைப்புகளை அருளியுள்ளாள். அவையிரண்டுமே, ஸ்ரீவிஷ்ணுவிடம் மிகுந்த ஈடுபாட்டுடன், ஆழ்ந்த உணர்ச்சிபூர்வமான பக்தியுடன் இயற்றப்பட்ட அழகான கவிதைகள்.

தனது அவதார லக்ஷயத்தை அடைவதற்காக, பெருமாளின் மூன்று வழிப் பாதையை ஆண்டாள் கையாண்டாள். 'திருப்பாவை' யின் மூலம் சகல ஜீவராசிகளையும் ஒன்றுகூட்டி, அவர்களை புருஷார்த்தத்தை நோக்கி அழைத்துச்சென்றாள்.

நாராயணா, தாமோதரா, மாயன், மாதவன் போன்ற நாமங்களை வாயினால் பாடி நாமசங்கீர்த்தனம் செய்தாள். 'தூமலர் தூவித் தொழுது' என அர்ச்சனை மார்க்கத்தை தெளிவுபடுத்தினாள். "நாராயணனே நமக்கே பறைத் தருவான்" என்று உறுதியுடன் அறிவுறுத்தினாள். பெருமாள் நம் அந்தர்யாமி (அவர் நம் ஆத்மாவுக்குள் இருக்கிறார்) என்பதை நாம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் கூட அவர் நம்மீது வைத்திருக்கும் க்ருபாகடாக்ஷத்தினால் நம்மை ரக்ஷிக்க ஸித்தமாக இருப்பார், அவரே உபாயம் மற்றும் உபேயம். கோதையின் திருப்பாவை நோன்பின் ஸ்வபாதேசமானது, வேதவித்துகளின் சோமயாகத்தைப் போன்றதே. இதற்றின் குறிக்கோள், பிரபஞ்சத்தின் க்ஷேமமே ஆகும். ஆண்டாளின் அருளிச்செயலின்படி சென்றால், போய பிழையும், புகுகின்ற பிழையும் தீயினில் தூசாகி, அனைவரும் "செல்வத் திருமாலால் எங்கும் திருவருள் பெற்று இன்புறுவர்" என்பதில் ஐயமுண்டோ?

|| ஸ்ரீ ஆண்டாள் திருவாடிகளே சரணம் ||

S.சித்ரா
பெங்களூர்.

ஸ்ரீஹரி:

# ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம்

வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

நாளை வதுவை மணமென்று நாளிட்டு
பாளைகமுகு பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்த னென்பான் ஓர்
காளைபுகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

இந்திரனுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து
மந்திரக் கோடியுடுத்தி மணமாலை
அந்தரி சூட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாரெடுத் தேத்தி
பூப்புனை கண்ணிப் புனிதனோடு என்தன்னை
காப்பு நாண்கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

கதிரொளி தீபம் கலசமுடனேந்தி
சதிரிள மங்கையர்தாம் வந்து எதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலைதொட்டு எங்கும்
அதிரப்புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

மத்தளம் கொட்ட, வரி சங்கம் நின்று ஊத,
முத்து உடைத்தாமம் நிரை தாழ்ந்த பந்தற் கீழ்,
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன், தோழீ! நான்.

வாய்நல்லார் நல்லமறையோதி மந்திரத்தால்
பாய்சிலை நாணல்படுத்துப் பரிதி வைத்து
காய்சினமா களிறன்னான் என்கைப்பற்றி
தீவலஞ்செய்யக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

இம்மைக்கும் ஏழேழ்பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடையவன் நாராயணன் நம்பி
செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

வரிசிலைவாள் முகத்து என்னைமார் தாம் வந்திட்டு
எரிமுகம்பாரித்து என்னை முன்னே நிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைம்மேல் என்கைவைத்து
பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

குங்கும மப்பிக் குளிர்சாந்த மட்டித்து
மங்கலவீதி வலஞ்செய்து மணநீர்
அங்கு அவனோடும் உடன்சென்று அங்கு ஆனைமேல்
மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான்.

ஆயனுக்காகத் தான் கண்ட கனாவினை
வேயர்புகழ் வில்லிபுத்தூர்க் கோன் கோதைசொல்
தூய தமிழ்மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே.

வைணவத் திருமணங்களில் இன்றும் இடம் பெறுவன இந்தப் பாசுரங்கள்.

பக்தியுடன் இப்பாடல்களைப் பாடிப் பரமனை வேண்டும் கன்னிப்பெண்களுக்கு விரைவில் திருமணம் நடக்குமென்பது பெரியோர் வாக்கு – நம்பிக்கை.



..... RM விபுலா பெங்களூரு

# SriVilliputhur/ஸ்ரீ வில்லிபுத்தூர்


Temple Tower


Swarna Vimanam of Andal Sannidhi


Avatara Nandavanam


Images in the temple


Maarghazhi neeraattam


Marghazhi purapadu

Photos courtesy: Veeraraghavan, Mumbai



## ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவை



- தமிழ் ப்ரபந்தங்களுக்குள் ரத்தினமாய் விளங்குவது திருப்பாவை .
- திருப்பாவை ஒரு அனுபவ க்ரந்தம்.
- சின்ன குழந்தையும் புரிந்து கொள்ளும்படியான ஒரு பிரபந்தம் உண்டு என்றால் அது திருப்பாவை ஒன்றுதான்.
- பாசுரம் 1 :: நாராயணனே என்று அவன் ஒருவன்தான் பரமாத்மா என்று பரமார்த்த ஸ்வரூபத்தை (ஒன்று) காட்டுகிறாள்.
- பாசுரம் 2 :: நாம் விட வேண்டியது , செய்ய வேண்டியது என்று 2 விஷயங்களை சொல்கிறாள்.
- பாசுரம் 3 :: பக்தி யோகம் காட்டப்படுகிறது.
- பாசுரம் 4 :: பலனை சொல்கிறாள்.
- பாசுரம் 5 :: விரோதி என்று நம் பாப புண்யங்களை குறிப்பிடுகிறாள்.
- முதல் 5 பாசுரங்களை சாஸ்த்ரார்த்த பேடிகை என பெரியவர்கள் கூறுவர்.

....சேவா ஸ்வாமி உபந்யாஸத்திலிருந்து



வந்தே குரு பரம்பராம்//
ஆழ்வார் ஆசார்யர் திருவடிகளே ச'ரணம்//
கோவிந்தன் உள்ளமதில் கோலோச்சும் கோதை ச'ரண்!//

வண்புதுவை நகர்தனிலே திருவாடிப் பூரத்தில்
பெண்பெருமை மிகவிளங்கப் பேரொளியாய் அவதரித்தாய்!
மன்னுலகில் செய்தவத்தால் மாதவனைப் பிணைத்தாயால்/
பின்னவர்க்குக் கதியானாய்!எங்களையும் ஆண்டாளே! (1)

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலின்
மடிமீதமர்ந்துமிக மகிழ்வுற்றாய் மலர்க்கோதாய்!
அடியோமும் மாதவனை அடைந்திடவே கொடையாக
ஐயைந்தும் ஐந்தும் அளித்த தனிப் பெருநிதியே! (2)

மண்ணதனில் பிறந்துநிற்கும் மாந்தர்கள் அனைவருக்கும்
கண்ணனவன் காதலொன்றே கடக்கும் வழி என்றுரைத்த
மண்மகளே,பாமாலை,பூமாலை புனைந்தளித்த
நின்துணையே துணையாக்கொள் அடியேற்கும் அருள்வாயே! (3)

பெரியாழ்வார், பெருமையுடன் பேசநின்ற பைங்கிளியே!
ஒருநூற்று நாற்பத்து மூன்றதனில் ஓதுவித்தாய்!
இருமைக்கும் ஏமாப்பு இதன்கண்ணே கண்டறியத்
தருவிருந்தே!பொற்பதங்கள் சாற்றிநின்றோம் எமக்கருளே! (4)

மன்னுபுகழ் மலர்க்கோதை மலர்ப்பதமே மருவிமகிழ்.

-ஹேமா ராகவன்,வயநாடு.




வந்தே குரு பரம்பராம்//
ஆழ்வார் ஆசார்யர் திருவடிகளே ச'ரணம்//
சூடிக்கொடுத்த  சுடர்க்கொடி பதம் துணை//

நாமமாயிரங்கொண்டான் மனங்கொண் டவனையேதன்
மாமிதன் மகனாய்க்கொண்டாள்; மன்னுயிர் காத்து நின்றாள்!
ஏனமாய்த் திருமுட்டத்துத் தேவனார் நவின்றவைகள்-
ஆமென மெய்ப்பிக்கும்ஓர் திறத்தொடு அவதரித்தாள்! (1)

சேமமும் சிறப்பும் யாண்டும் விழைபவர் தன்மனத்துள்,
நாமமாம் அமிழ்தம் தந்து நல்லன எல்லாம் தந்தாள்!
மாமாயன் மாதவன்வை குந்தனென்றிவள்போல்நாளும்
நேமியைப் பற்றினானைப் பற்றியே உய்வோம்வாரீர்! (2)

கோபாலன் குளிர்ந்து நோக்கும் கோபியாம் எங்கள் கோதை,
கோதறப் பகிர்ந்தவைகள் பகிர்ந்துஅவள் பாதம் பற்றும்

-ஹேமா ராகவன்,வயநாடு.

ஸ்ரீமத்யை கோதாயை நம:

## ஆண்டாளும் ஆதிவராஹனும்

**–ஆர்.ரகுராமன்**

திருப்பாவைஜீயரான எம்பெருமானருடைய அந்தரங்க சிஷ்யர்களிலே ஒருவரான அநந்தாழ்வான் ஆண்டாள்விஷயமாக நான்கு ச்லோகங்கள் அருளிச் செய்துள்ளார். அதுவே கோதாசது:ச்லோகீ என்று குலாவப்படுகிறது. அதிலே ஒரு ச்லோகம்–

கல்பாதௌ₃ ஹரிணா ஸ்வயம் ஜநஹிதம் த்₃ருஷ்ட்வைவ ஸர்வாத்மநாம்
ப்ரோக்தம் ஸ்வஸ்ய ச கீர்த்தநம் ப்ரபத₃நம் ஸ்வஸ்மை ப்ரஸூநார்ப்பணம் ।
ஸர்வேஷாம் ப்ரகடம் வித₄ாதுமநிஶம் ஸ்ரீத₄ந்விநவ்யே புரே
ஜாதாம் வைதி₃கவிஷ்ணுசித்ததநயாம் கோத₃ாமுத₃ாராம் ஸ்தும: ॥

என்று. ச்வேதவராஹகல்பத்தின் ஆதியிலே வராஹாவதாரமெடுத்த எம்பெருமான் (பூமிப்பிராட்டியினுல் ப்ரார்த்திக்கப்பட்டவனாய்), சேதநர்கள் உய்வுபெறவேண்டுமென்பதைத் திருவுள்ளம்பற்றி மூன்று உபாயங்களைக் கூறினான். ஒன்று திருநாமஸங்கீர்த்தனம். மற்றொன்று ப்ரபதனம். மற்றொன்று புஷ்பார்ச்சனம். வாயாலே எம்பெருமானுடைய திருநாமங்களைப்பாடுவது, மனத்தாலே எம்பெருமானுடைய திருவடிகளே தஞ்சம் என்று நினைப்பது, பூக்களைக்கொண்டு அவனுக்கு அர்ச்சனை செய்வது. திருநாமஸங்கீர்த்தனம் வாசிகமான வ்யாபாரம் (வாயினால் செய்யப்படும் செயல்). ப்ரபதனம் மாநஸிகமான வ்யாபாரம் (மனத்தாலே செய்வது). புஷ்பார்ச்சனம் காயிக வ்யாபாரம் (உடலால் செய்வது). ஆக, மனம்,மொழி, மெய் என்கிற கரணத்ரயத்தாலும்(முக்கரணங்களாலும்) செய்யவேண்டிய வ்யாபாரத்ரயத்தை (மூன்று செயல்களை) பூமிப்பிராட்டிக்கு உபதேசித்தான் எம்பெருமான். வராஹநாயனாரிடத்திலே சிஷ்யையாகவும், தாஸியாகவும், பக்தையாகமிருந்து தாம் கேட்ட அர்த்தவிசேஷங்களைத் தன்னுடைய அநுஷ்டானத்திலே காட்டுவதற்காகவே 'ஜாதாம் வைதி₃க விஷ்ணுசித்த தநயாம்' என்று த்₃விஜ(அந்தணர்) குலதிலகரான பெரியாழ்வாருக்குப் பெண்பிள்ளையாக வந்தவதரித்தனள்.

குழந்தை கிணற்றில் விழுந்தால் தானும் ஒக்கக் குதித்தெடுக்கும் தாயைப் போலே பூமிதேவியானவள் ஆண்டாளாகப் பிறந்தனள். வராஹப் பெருமானிடம் தாம் கேட்டதை அனைவருக்கும் வெளிப்படுத்துவதற்காகத் திருப்பாவை பாடினாள். பாடினால் வீடு (மோக்ஷம்) என்றான் வராஹன். ஆதலால் திருப்பாவையில் 13 பாசுரங்களில் எம்பெருமானைப் பாடவேண்டுமென்று காட்டினாள். அவன் சொன்ன மூன்று வார்த்தைகளையும் 'மாயனைமன்னு' என்று தொடங்கும் ஐந்தாம்பாசுரத்தில்'தூமலர்தூவித் தொழுது, வாயினால்பாடி, மனத்தினால் சிந்திக்க' என்று காட்டியருளினாள்.

திருப்பாவையில் மட்டுமல்லாமல் நாச்சியார் திருமொழியிலும் ஆண்டாள் வராஹனின் வார்த்தையை வெகுவாக மெச்சுகிறாள். மெய்ம்மைப்பெரு

வார்த்தையான க்ருஷ்ண சரமச்லோகத்தைக் காட்டிலும், கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனுர் சொல் எனப்படும் ராமசரமச்லோகத்தைக் காட்டிலும் மானமிலாப்பன்றியான வராஹனின் வார்த்தைகளே, எவ்வளவு முயன்று என் நெஞ்சை விட்டுப் பேர்க்கப் பார்த்தாலும் பேரமாட்டாதவை என்கிறுள்.

பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனுர்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே.

என்பது பாடவல்ல நாச்சியாரின் பாசுரம். இப்பாசுரத்தில் எம்பெருமானை 'மானமில்லாப்பன்றி' என்கிறுள் ஆண்டாள். 'மானமிலாப்பன்றி' என்பதற்குப் பொருள் யாதெனில், 'அபி$_4$மானம் இல்லாத' என்று பொருள். அபி$_4$மாநம் என்ருல் கர்வம், அஹங்காரம். மனிசர்க்குத் தேவர் போலத் தேவர்க்கும் தேவனுன எம்பெருமான், தான் பெரியவன் என்ற எண்ணம் சிறிதுமில்லாமல் நம்மைக் காப்பதற்காகத் தன்னைத் தாழ்த்திக்கொண்டு பன்றியாக வந்ததால் அவனை 'மானமிலாப்பன்றி' என்கிறுள். 'நானே அனைவரையும் நியமிப்பவன், ஈச்வரன் என்று பெயர் பெற்றவர்களுக்கெல்லாம் ஈச்வரன்' என்ற கர்வம் பன்றியாகத் தோன்றிய அப்பெருமானுக்குக் கிடையாது.

ஸ்ரீராமாவதாரத்திலே மாயமானுக வந்தான் மாரீசன். சக்ரவர்த்தித் திருமகனிடத்திலே ஸீதை 'அம்மானைப் பிடித்துத் தாரும்' என்ருள். அம்மான் (ஸ்வாமியான ராமன்) அருகில் இருக்கச்செய்தே அம்மான் மறியை (தொலைவிலுள்ள மான் குட்டியை) ஆசைப்பட்டாள். ஸீதையிடத்தில் அன்பினுல் கட்டுண்ட ராகவன் சிலை (வில்) பிடித்து வேகமாக எழுந்தருளினுன். அப்போது இளையபெருமாள் (இலக்குவன்) ராமபிரானைத் தடுத்து நிறுத்தி 'ராமா! இது பொன்மானல்ல; பொய்மான். இது உண்மையான மானுக இருக்குமே யானுல் மற்ற மான்கள், இந்த மான் அருகில் வந்தவுடன் பயந்து ஓடுவானேன். ராக்ஷஸன் ஒருத்தன் மான் உருவத்தில் வந்திருக்கிருன். அவனுடலிலிருந்து ராக்ஷஸ க$_4$ந்த$_4$ம் (மணம்) வீசுகிறது. அதனுலேயே மற்ற மான்கள் அந்தமானைக் கண்டு மிரண்டு ஓடுகின்றன' என்ருன். மாரீசன் மாயமானுக வந்த காலத்திலே அவனுடம்பிலே ராக்ஷஸ கந்தம் வீசியதுபோலே வராஹநாயனுருடைய திருமேனியிலே ஸர்வேச்வரத்வ கந்தம் வீசுமோ எனில் வீசாது. இது அவதாரத்திலே வராஹப்பெருமானுக்குண்டான மெய்ப்பாடு. மற்ற பன்றிகளும் 'நம்மினம்' என்று நினைக்கும்படியன்ருே இவன் தன்னைத் தாழ்த்திக் கொண்டான். மற்ற காட்டுப்பன்றிபோலே முத்தக்காசு எனப்படும் கோரைக்கிழங்கையே விரும்பி அமுதுசெய்யும்படியிறே அவன் தன்னைத் தாழவிட்டான் என்று, இந்த வராஹனின் எளிமையில் ஈடுபட்டாள் ஆண்டாள். இப்படி அடியார்களுக்காகத் தன்னைத் தாழ்த்திக் கொண்டமையினுல் தேசுடைய தேவனுனன் அவன். தேஜஸ்ஸையுடைய தெய்வமான வராஹனின் வார்த்தைகள் என் நெஞ்சிலிருந்து பேர்க்கவும் பேராதவை என்கிருள் நாச்சியார். அப்படிப்பட்ட ஆண்டாளுடையவும், ஆதிவராஹனுடையவும் அருளுக்கிலக்காகி அடியார்கள் அனைவரும் ஆநந்தத்தை அடைவார்களாக.

## விஷமும் அம்ருதமும்

எம்பெருமான் திருவுள்ளம் உகக்க வேண்டுமென்பதற்காக, நாம் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்யவேண்டும். நம்முடைய ஆநந்தத்திற் காகவோ, ப்ரதிபலனை எதிர்பார்த்தோ கைங்கர்யம் செய்யக்கூடாது. 'தே₃ஹி மே த₃த₃ாமி தே' [நீ எனக்குக் (அதைக்)கொடு, நான் உனக்கு (இதைத்) தருகிறேன்] என்று பேரம் பேசினல் பகவானுடைய திருவுள்ளம் புண்படும். ஒருபயனை அடையவேண்டுமென்பதற்காக ஓர் உபாயத்தை அநுஷ்டித்தல் ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸ்வரூபத்திற்குச் சேராது. குழந்தைகளான நமக்கு வேண்டிற்றெல்லாம், தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணனே நல்குவான்.

'விஷம்' என்ருல் உயிர்க்கொல்லி. 'அம்ருதம்' என்ருல் சாவாமல் காக்கின்ற உயர்ந்த தேவருணவு என்று நாம் நினைக்கிருேம். பகவானுக்கு எது விஷம், எது அம்ருதம் தெரியுமா? ஒரு ப்ரஸாதத்தை நாம் பகவானுக்குக் கண்டருளப்பண்ணுகிருேம். ஒரு வஸ்துவை எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக் கிருேம். அந்த வஸ்துவினிடத்திலே நமக்கும், நம்மைச் சேர்ந்தவர்களுக்கும் வேண்டும் என்று நினைவில்லாமல், எம்பெருமானுக்கே என்று நினைத்து ஸமர்ப்பித்தால் அதனை அம்ருதமாகவே ஏற்கிருன் பகவான். அதில் நமக்கும் பங்கு வேண்டும் என்ற எண்ணம் உண்டானல் அது பகவானுக்கு விஷம் போலாகிவிடும். ஸந்நிதியில் பகவானுக்கு இரண்டுபடி சர்க்கரைப் பொங்கல் ஸமர்ப்பிக்கும்போது இதில் நமக்கு ஒருபடி ப்ரஸாதம் வேண்டும் என்று நினைத்துக்கொண்டே ஸமர்ப்பித்தால், அந்த ப்ரஸாதத்தை பகவான் விஷம் போல் கருதுவான்.

பூதனையானவள் தன்னுடைய முலைகளில் விஷத்தைச் சேர்த்து வைத்தபோது 'இந்த விஷமானது என்னை முடித்துவிடக்கூடாது. என்னைச் சேர்ந்தவர்களுடைய உயிரையும் முடித்துவிடக்கூடாது. இந்த விஷம் கண்ணனுக்குத்தான், கண்ணனுக்குத்தான்' என்று நினைத்து சேகரித்தாளாம். கண்ணனுக்கென்றே சேர்த்து வைத்ததல்லவா. அதனல் அது அவனுக்கு அம்ருதமாயிற்று. தனக்கும், பிறருக்கும் என்று பங்குபோட்டால் அது பகவானுக்குச் சுவைக்காது. 'விடப்பால் அமுதா அமுதுசெய்திட்ட மாயன்' என்ருர் ஆழ்வார். அவனுக்கென்றே ஸமர்ப்பித்ததால் விஷப்பாலை அம்ருதமாக ஏற்ருன் எம்பெருமான்.

பிறர்க்குரியதை அவன் விரும்பமாட்டான் என்பதற்கு மற்றுமோர் உதாரணம் கேண்மின் ! உயரமான இடத்தில் உறியில் வெண்ணெய் வைக்கப் பட்டுள்ளது. அடியார்கள் கைபட்ட அதனைக் களவுசெய்தாவது உண்ண வேண்டும் என்ற ஆசை கண்ணனுக்கு ஏற்பட்டது. வீட்டிற்கு வெளியில், வெகுநாள்கள் உபயோகப்படுத்தி ஓட்டைவிழுந்துபோன ஒரு மரவுரல் கிடந்தது. அதனை உருட்டிக்கொண்டு வந்து அதன்மேலேறி வெண்ணெயைத் திருடி புஜித்தான். இதனைப் பெரியாழ்வார் 'பொத்தவுரலைக் கவிழ்த்து அதன்மேலேறி தித்தித்தபாலும் தடாவினில் வெண்ணெயும் மெத்தத்திருவயிருர

விழுங்கிய அத்தன்' என்றருளிச்செய்தார். எம்பெருமானுக்கு நல்லவுரல் கிடைக்கவில்லையா. பொத்தவுரல் தான் கிடைத்ததா. 'பொத்த' என்ற அடைமொழியை ஏன் ஆழ்வார் அருளிச்செய்தார். பொத்தவுரல் – வேறு எவருக்கும் உபயோகப்படாத உரல். அதனுல் அதனை வெளியிலே எறிந்து விட்டனர் ஆய்ச்சியர். மற்றப்பேருக்கு உரியதல்லாதது. அதனுலேயே, பகவான் அதனை 'இதுவே நமக்குரியது' என்று உபயோகித்துக்கொண்டான். இதுவே நல்லவுரலாக இருந்தால் இடிப்பதற்குப்பயன்படுத்துவர் இடையர். பிறருக்கு உரியதை விரும்பமாட்டான் கண்ணன். அவனுக்கென்று இருப்பதையே விரும்புமவன்.

ஆதலால், பகவானுக்கு எதைச் செய்தாலும் அவனுக்கென்றே ஸமர்ப்பிக்கவேண்டும். அதுவே அவன் உகந்து ஏற்கும் அமுதமாகும்.
(கீர்த்திமூர்த்தியான வித்வான் விஞ்சிமூர் ஸ்ரீ.உ.வே.ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி திருவரங்கத்தில் திருப்பாவை உபந்யாஸத்தினிடையே ஸாதித்ததை அடிப்படையாகக் கொண்டு எழுதினேமத்தனை– ஆசிரியர்).

**கோதையின்றேல் கதி ஏது?**

*புதிதுபுதிதாகப் பாபத்தைச் செய்துகொண்டிருக்கும் ஒருவன், எம்பெருமான் திருமுன்பே சென்று அடிபணிந்தான். அடக்குவாரில்லாத ஸ்வதந்த்ரனுன எம்பெருமான் பாபியான அவனைப் பார்க்கவிரும்பாமல் பெரியபிராட்டியார் இருக்கும் வலப்புறமாகத் திரும்பினுன். உடனே பெரியபிராட்டியார் 'இவன் குற்றவாளிதான். ஆகிலும் இவனை ரக்ஷித்தேயாகவேண்டும். குற்றம்செய்யாதவர்கள் இவ்வுலகில் யார் தான் இருக்கிறுர்கள்? மணல்சோற்றில் கல் ஆராய்வாருண்டோ? வந்தவனை ஏற்றுக்கொள்ளும்' என்றுள். 'இன்னின்ன குற்றமிழைத்தவனுக்கு இன்னின்ன தண்டனை' என்று சாஸ்த்ரங்களில் சொல்லியிருக்க, அபராதியான இவனை எப்படி மன்னிப்பது? வந்தவர்களுக்கெல்லாம் பரிந்து பேசுவதே உனக்கு வாடிக்கையாகிவிட்டது' என்று கூறி, முகத்தை இடப்புறமாகத் திருப்பினுன் எம்பெருமான். இடப்புறத்தில் உள்ள ஆண்டாள் 'குற்றம் காண்பானென், பொறுப்பானென்' என்று நினைத்து, எம்பெருமானிடம், வந்துள்ள சேதனன் குற்றமே செய்யாதவன் என்று வாதாடி, அவனை ரக்ஷிக்கும்படி செய்துவிடுவாள். ஆண்டாள் அருகில் இல்லாமற் போனுல் பெரியபிராட்டியாரின் சிபாரிசைப் பொருட்படுத்தாமல் எம்பெருமான் முகத்தை மாறவைத்து அடியார்களைக் கைவிட்டேயிருப்பன். ஆக, எம்பெருமான் நம்மைக் கைக்கொள்வதே கருணைமிகுந்த கோதைநாச்சியார் பக்கத்தில் இருப்பதால் தான். அவளின்றேல் நமக்கு கதி ஏது? இதனை கோதாஸ்துதியில் வேதாந்தவாசிரியர் அழகாகக் கூறுகிறுர் –*

ஆர்த்$_3$ராபராதி$_4$நி ஜநேऽப்யபி$_4$ரக்ஷணார்த்த$_2$ம்
ரங்கே$_3$ஶ்வரஸ்ய ரமயா விநிவேத்$_3$யமாநே ।
பார்ஶ்வே பரத்ர ப$_4$வதீ யதி$_3$ தத்ர நாஸீத்
ப்ராயேண தே$_3$வி வத$_3$நம் பரிவர்த்திதம் ஸ்யாத்॥

# ஸ்ரீ ஆண்டாளும் எதிராசரும்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி அப்பன் பரகால ராமாநுஜ எம்பார் ஜீயர் ஸ்வாமி

கலியில் திருவேங்கடவனே கண்கண்ட தெய்வமாய் நிற்கிறான். நம்மாழ்வார் ''ஒழிவில் காலமெல்லாம் அவன் திருவடிகளில் வழுவிலா அடிமை'' செய்ய பாரித்திருந்தார்.

ஸ்ரீ ஆண்டாளும் ''வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே'' என்று கூறி மேகத்தைத் தூதாக விடுகிறாள். இவ்விருவரையும் மனத்தில் கொண்ட எம்பெருமானார், அவரவர் விருப்பங்களை நிறைவேற்ற திருவுள்ளம் கொண்டார். நம்மாழ்வார் விருப்பத்தை ஸ்ரீ அனந்தாழ்வானையும் அவருக்குப் பிறகு பெரிய கேள்வி ஜீயரையும் நியமித்து, கைங்கர்யம் தொடர வழிவகுத்தார்.

ஆண்டாளுக்கு கீழ்த்திருப்பதியில் கோயில் அமைத்து கோவிந்தராஜர் ஸன்னதியில் தனிக்கோயில் அமைத்து சிறப்பித்தார் எனினும், நம்மாழ்வார் வைகுந்தம் சென்று அடியார் குழாங்களோடு கூடி அடிமை செய்ய ஆர்த்தி தலையெடுத்துப் பேசியபோது, திருமாலிருஞ் சோலையில் தன் இருப்பைக் காட்டித் தந்துள்ளான் எம்பெருமான் தெற்குத் திருமலையில் வடிவழகைத் தினவடங்க அனுபவித்தபோது, வடக்குத் திருமலையில் அவர் நெஞ்சு சென்றது.

அதே போன்று ஆண்டாளுக்கு திருவேங்கடமுடையானிடத்தில் சென்ற நெஞ்சு, தெற்குத் திருமலைக்குத் திரும்பியது. மாலிருஞ்சோலை மணாளனை ''ஆண்டாள் தன் தந்தையாரைப் போன்றே பெரிதும் விரும்பி

*''நாறு நறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு*
*நான் நூறுதடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவிவைத்தேன்*
*நூறு தடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்*
*ஏறுதிருவுடையான் இன்று வந்து இவை கொள்ளுங்கொலோ?''*

என்றதோடு நில்லாமல்,

*''இன்று வந்து இத்தனையும் அமுதுசெய்திடப்பெறில், நான்*
*ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப் பின்னும் ஆளும் செய்வன்''*

என்று தன் பாரிப்பை நித்ய கைங்கர்ய பரமாகப் பெரிதாக்கிக் காட்டினாள்.

எம்பெருமானார் வடதிருமலையில் ஆழ்வார் விருப்பத்தைச் செயல்படுத்தியதைப் போலவே, ஆண்டாளின் பாரிப்பை திருமாலிருஞ்சோலையில் நிறைவேற்றியபின் ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று ஸேவித்தபோது, ''வாரும் எம் அண்ணரே'' என்று ஆண்டாளின் அநுக்ரஹம் பெற்றார். இதனால் ஆண்டாளுக்கும் அண்ணராக வாழ்த்துப் பெறுகிறார் எதிராசர்.

''தேவுமற்றறியேன்'' என்று நம்மாழ்வாரைச் சார்ந்துநின்ற மதுரகவிகள் போன்று, வில்லிபுத்தூர் கோன் பட்டர்பிரான் வளர்ப்பில்,

''நாகணைமிசை நம்பரர் செல்வர் பெரியர்'' என்று பின்வாங்கி எம்பெருமானை விட்டு பெரியாழ்வாரையே தஞ்சமாகப் பற்றி விஷ்ணுசித்தர் வல்லபரிசு வருவிப்பரேல் அது காண்டுமே'' என்று சரமபர்வ நிஷ்டையை (அடியவர்க்கு ஆட்படுதல்) மேற்கொண்டாள்.

மதுரகவிகள் மற்றும் ஆண்டாள் வழியையே எதிராசரும் பின்பற்றினார். ''மாறன் அடிபணிந்துய்ந்தவர்'' என்றும் ''குறையல் பிரானடிக்கீழ் விள்ளாத அன்பன்'' என்றும் ஆழ்வார்களை அடியொற்றி சரமபர்வத்தை மேற்கொண்டார்.

மதுரகவிகள், ஆண்டாள், எம்பெருமானார் இம்மூவரையும் ஒரே வரிசையில் சேர்த்து மாமுனிகள் ''உபதேச ரத்தினமாலை''யில் பாடிப் பரவியுள்ளார்.

''உண்டபோது ஒரு வார்த்தை: உண்ணாதபோது ஒரு வார்த்தை'' என்று பத்துப்பேர் உண்டிறே; அவர்களைச் சிரித்திருப்பார் ஒருவர் உண்டிறே'' என்று மதுரகவிகளைக் குறிப்பிடுகிறார் மாமுனிகள்.

''ஆழ்வார்கள் தம்செயலை விஞ்சி நிற்கும் தன்மையள்'' என்று ஆண்டாளைக் குறிப்பிடுகிறார் மாமுனி.

ஆழ்வார்கள் அவதரித்த நாள்களிலும் வாழ்வான நாள் நமக்கு என்று எம்பெருமானார் அவதரித்த சித்திரையில் செய்ய திருவாதிரையைப் போற்றுகிறது உபதேச ரத்தினமாலை.

இப்படி மதுரகவிகள் படியே நிலையாகப் பெற்றவர்கள் ஆண்டாளும் எதிராசரும்.

''கலியும் கெடும் கண்டு கொண்மின்'' என்று எதிராசரை எதிர்நோக்கிய ஆழ்வாரின் திருவுள்ளப்படியே திருவரங்கத்து அமுதனார்,

*''தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து தலமுழுவதும் கலியே*
*ஆள்கின்ற நாள் வந்து அளித்தவன் காண்மின் அரங்கர்மௌலி*
*சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல்லருளால்*
*வாழ்கின்றவள்ளல் இராமாநுசனென்னும் மாமுனியே''.*

என்ற பாசுரத்தின் ஆண்டாளையும் எதிராசரையும் இணைத்துப் பேசும் அழகைக் காணலாம்.

''சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறியாவும் தெரிந்தவன், நல்லார் பரவுமிராமாநுசன்'' - அன்றாடம் ஸ்ரீரங்கத்தில் மாதுகரத்துக்கு (பிட்சைக்கு) எழுந்தருளுகையில் ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையையே ஓதிச் செல்லும் வழக்கம் கொண்டிருந்தார் என்பது உலகறிந்த உண்மை. ''உந்து மதகளிற்றன்'' பாசுரத்தில் இச்செய்தி வெளிவருகிறது.

இதிலிருந்து எம்பெருமானார் திருப்பாவையில் எத்தகைய ஈடுபாடு கொண்டிருந்தார் என்று தெரிகிறது. ''திருப்பாவை ஜீயர்'' என்ற பெயரும் பெற்றார் என்பது உலகறிந்ததே.

ஏரார் எதிராசர் இன்னருளால் அன்றோ ஸ்ரீ ஆண்டாளின் திருப்பாவை நமக்கு நித்யாநுஸந்தான கைங்கர்யமாகக் கிடைத்துள்ளது. எம்பெருமானார் ஈடுபட்டதனாலேயே திருப்பாவைக்கு ஒரு ஏற்றம் என்றால் அது மிகையாகாது. உலகளாவிய புகழ்கொண்ட ஆண்டாளும் எதிராசரும் கலியும் கெடும் வண்ணம் திருப்பாவையின் மூலம் செயல்பட்டுள்ளனர் என்பது வியந்து போற்றத்தக்கது.

ஸ்ரீ வராகப் பெருமாள் பூமிப்பிராட்டியிடம் "என்னை வாயினால் பாடி, மனத்தினால் த்யானித்து, தூயமலர்களைக் கொண்டு அர்ச்சித்தால், ஜீவாத்மாக்கள் என்னை எளிதில் அடையலாம்" என்று சொன்னதை நமக்கு நடத்திக் காட்டவே இப்பூவுலகில் வந்து அவதரித்தாள். என்ன ஆச்சர்யம்! என்ன கருணை!

ஆண்டாள் நாச்சியார் தன்னை கோபிகையாகவும், ஸ்ரீவில்லிபுத்தூரை திருவாய்ப்பாடியாகவும், தன் தோழிகளை கோபிகைகளாகவும், வடபெருங்கோயிலுடையானை கண்ணனாகவும், அந்த எம்பெருமானின் ஸந்நிதியை நந்தகோபரின் திருமாளிகையாகவும் பாவித்துக்கொண்டு எம்பெருமானை அடைவதற்கு அவனே உபாயம், அடியார்கள் மூலமாகவும் நப்பின்னைப் பிராட்டி புருஷகாரத்துடனும், அவனை அடைந்து அவனுடைய ஆனந்தத்துக்காகவே கைங்கர்யம் செய்வது ஆத்மாவின் ஸ்வரூபத்துக்குச் சேர்ந்தது என்பதை எளிய தமிழ் பாசுரங்களின் மூலம் தன்னுடைய பெருங்கருணையாலே வெளியிட்டாள்.

திருப்பாவை வேதம் அனைத்துக்கும் வித்து என்று கொண்டாடப்படுகிறது. அதாவது, வேதத்தின் ஸாரமான விஷயங்களை நாம் திருப்பாவையிலே கண்டுவிடலாம். வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிவது, வேதத்தில் காட்டப்பட்டுள்ள முக்யமான விஷயம். அதேபோல அடியார்களுடன் கூடி இருந்து எம்பெருமானுக்குத் தொண்டு செய்வது, அதுவும் அவ்வாறு செய்யும்பொழுது எம்பெருமானுடைய ஆனந்தத்துக்காகவே அந்த கைங்கர்யத்தைச் செய்வது, ஆகிய விஷயங்கள் மிக முக்யமாகக் கருதப்படுகின்றன. இதை எல்லாம் நாம் திருப்பாவையில் நன்றாக அனுபவிக்கலாம்.

எம்பெருமானார் திருப்பாவையில் கொண்டிருந்த ஈடுபாட்டினால் திருப்பாவை ஜீயர் என்றே அழைக்கப்பட்டார். குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைவராலும் விரும்பி அனுஸந்திக்கப்படும் திருப்பாவையைப் போலே வேறு ப்ரபந்தம் இவ்வுலகில் இல்லை என்பது இதற்கு இருக்கும் தனிச்சிறப்பு.



## ஆண்டாள் மங்களம்

**ஆண்டாள் உனக்கு மங்களம் ।**

**நித்ய கல்யாணி கோதா உனக்கு மங்களம் ।**

**ஸ்ரீவில்லிபுத்தூர் தன்னில் ஆடிப்பூரத்தில் தோன்றி,**

**ரங்க மன்னர் உடன் கூடி வெள்ளி தோறும் ஊஞ்சலாடும் ॥**

**( ஆண்டாள்...)**

**நந்தவனத்தினிலே ப்ருந்தாவனத்தினில் தோன்றிய ஆண்டாளே**

**பெரியாழ்வார் மகளாய் வளர்ந்து மகிழ்ந்த ஆண்டாளே ।**

**ஒருநூற்று நாற்பத்து மூன்றயும் உரைத்த**

**புகழ் பெற்ற ஆண்டாளே ।**

**சூடிய மாலையுள்ளில் மாலைவரித்த கோதை நாயகி**

**ஆண்டாள் தாயே ॥**

**ஆண்டாள் உனக்கு மங்களம் ।**

**நித்யகல்யாணி கோதா உனக்கு மங்களம் ।**

சுபம்.